...gistered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 28—No. 10

1066
1066
4 ...

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

...லர் 28 | மன்மத ஐப்பசி 1955 அக்டோபர் | இதழ் 1...

OFFICE ... MADRAS

உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| திருமூலர் | ... | 321 |
| சைவப் பெருமக்கட்கு ஒரு விண்ணப்பம் | ... | 323 |
| அகலும் அகமும் | ... | 327 |
| கோமதி அந்தாதி | ... | 329 |
| களேபரம் | ... | 332 |
| வேதகிரீசுரர் பதிகம் | ... | 334 |
| நாலாயிரப்பிரபந்த விசாரம் | ... | 337 |


SL
R673ʷ211, N28
N55 28.10.
186916

...பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி...
...சிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
...சித்தாந்த மகா சமாஜம்
...ட் ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

## பிரிவாற்றாமை

சென்னமல்லேசுரர் சென்னகேசவப்பெருமாள் தேவஸ்தான பரம்பரை தருமகர்த்தரும், மணலி முதலியார் தர்மஸ்தாபனங்கள், மணலி மாணவர் இலவச விடுதி, கிண்டி மாணவர் இலவச விடுதி முதலியவற்றின் பரம்பரை தருமகர்த்தரும், எனது மைத்துனரும், நமது சமாஜத்தோடு நெருங்கிய தொடர்புடையவருமாகிய மணலி ஸ்ரீநிவாச முதலியாரவர்கள் 4-10-55 இரவு 8-மணிக்கு இறையடி நீழலடைந்தனர்.

இங்ஙனம் : ம. பாலசுப்பிரமணியன்.

## சந்தா அறிக்கை

1. மலாய் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள சமாஜ உறுப்பினர்கள் தயைகூர்ந்து 1956-ம் வருஷத்திய சந்தாவை "ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை - 1" எனும் விலாசத்திற்கு மணி ஆர்டர் மூலமாகவாவது British Postal Order மூலமாக வாவது கூடிய சீக்கிரம் அனுப்புதல் நலம். ஒவ்வொருவரும் தனித்தனியே அனுப்புவதைவிட, அங்கத்தினர் பலர் கூடி மொத்த தொகையை, மேற்கூறியபடி அனுப்புதல் நலம். மலாய்நாட்டு உறுப்பினர்கள் சந்தாவை, இவ்வாறு திருவாளர்கள் கே. இராமநாதன் செட்டியாரவர்களும் சிவநேயன் அவர்களும் அனுப்பியது பெரிதும் பாராட்டத் தக்கது. இவர்கட்குச் சமாஜம் நன்றி செலுத்துகிறது. 1956-ம் ஆண்டுச் சந்தாவையும் இம்மாதிரியே அனுப்புவார்கள் என எதிர்பார்க்கின்றது. சமாஜம் வி. பி.யில் வசூலிப்பதென்றால் P. P. Form வாங்குவது முதலிய பல சடங்குகளால் கால தாமதம் அதிக செலவு முதலியன ஏற்படும்.

2. இந்தியாவிலுள்ள அங்கத்தினர்களும் கூடியவிரைவில் 1956-ம் ௵ சந்தாவை மேலே குறித்துள்ள விலாசத்திற்கே அனுப்பவேண்டுகிறோம்.—சு. சிவகுமாரன், பொதுக் காரியதரிசி ; ம. பாலசுப்பிரமணியன், பத்திராசிரியர்.

Regd M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 28 | மன்மத ஐப்பசி 1955 அக்டோபர் | இதழ் 10

## திருமூலர்

பத்திராசிரியர்

பன்னிரு திருமுறை யாசிரியர்களுள் ஒருவர் திருமூல நாயனார். இவர் அருளிய "திருமந்திரம்" 3000 பாடல்களை யுடையது. இந்த நூல் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பற் பலவற்றைத் தெளிவாகக் கூறும் சிறப்புடையது. அஷ் டாங்கயோக நுட்பங்களை விளக்கும் உயர்வுடையது. வழி பாட்டில் சக்கரங்களைத் தாடணம் செய்து தியானம் செய்யும் முறைகளை விரிவாக எடுத்துரைப்பது. திருமந் திரத்துள் சொல்லப்படாத பொருள் இல்லை யென்றுகூட சொல்லிவிடலாம்.

திருமூலர் காலத்தைப் பற்றிப் பலவகையான ஆராய்ச்சி, பல பேரறிஞர்களால் நடத்தப்பெற்றது. முடி வாக அவர் கி. மு. 150 முதல் கி. பி. 850 என்ற கால வரை யறையைச் சேர்ந்தவர் என்ற முடிபு காணப்பட்டது. திருமூலர் வரலாற்றை மிக அழகாகச் சேக்கிழார் சுவாமி கள் கூறுகிறார் திருக்கயிலாயத்திலிருந்த ஒரு சித்தர் பொதிகையிலுள்ள அகத்தியரைக் காண, ஆகாய வழியாக வரும்போது, சாத்தனூருக்கருகில் பல பசுக்கள், மேய்க் கின்ற மூலன் உடலைச்சுற்றிக் கதறி அழுவதைக் கண்டார். இரக்கமே உருக்கொண்ட சித்தர், தமது உடலை ஓரிடத்தில் சேமித்து வைத்துவிட்டு. தமது உயிரை அந்த மூலன் உடலுள் புகுத்தி, தூங்கி எழுவதுபோல் எழுந்தார்.

பசுக்கள் நாத்தழும்ப நக்கி மோந்து, கனைத்து மேய்ந்தன. மாலைப்பொழுது வந்தவுடன் பசுக்கள் தத்தம் இல்லங்கள் சென்றன. மூலன் உடலிற் புகுந்துள்ள சித்தர், எவ் வீட்டிலும் நுழையாமல் வெளியே நின்றார். மூலன் மனைவி, தனது கணவன் இவ்வாறு நிற்பதைக் கண்டு, தொட்டு அழைக்கவந்தாள். மூலன் உடலிற் புக்க சித்தராகிய திருமூலநாயனார் அவளை உதறித்தள்ளி ஒரு பொது மடத்தில் சிவயோகத்தமர்ந்தார். மூலன் மனைவி அவ்வூர்ப் பெரியாரிடம் முறையிட்டாள். அவர்கள் திருமூலர் நிலையைக் கண்டு, இனி அவர் இல்வாழ்க்கைக்கு உதவார் என்று அவளிடம் சொல்லிவிட்டார்கள்,

திருமூலர் பின்பு நிட்டை கலைந்து, தாம் சேமித்து வைத்த தமதுடலைக் காணாமல், ஞானக் கண்கொண்டாராய்ந்து, சிவபெருமான் திருவுள்ளம் ஆகமப் பொருள்களைத் தாம் தமிழில் வெளிப்படுத்த வேண்டும் என்பதை அறிந்து, திருவாவடுதுறை சென்று, ஓர் அரசமரத்தின் கீழிருந்து, சிவயோகம் புரிந்து, மூவாயிரம் ஆண்டுகள் இப்புவியிலிருந்து மூவாயிரம் திருப்பாடல்களை அருளிச்செய்து, இறுதியில் திருக்கயிலை சென்று ஒருகாலும் பிரியாமைத் தாளடைந்தார். அந்நாள் ஐப்பசி அசுவினி (30-10-55) இதை நாம் சிறப்பாகக் கொண்டாடும் கடப்பாடுடையோம்.

திருமந்திரத்திலிருந்து சிறப்பாகக் கையாளப்பெறும் சொற்களும் சொற்றொடர்களும் ஆயிரக்கணக்கில் உள்ளன. "நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" என்பதை அறியாதார் யார்? இது 85-ம் பாட்டிலுள்ளது. அகத்திற் கண் கொண்டு பார்ப்பதே ஆநந்தம் (2944), அஞ்சும் அடக்கில் அசேதன மாமே (2033) அம்பல மாவது அகில சராசரம் (2775) அன்பே சிவமாவதாரும் அறிகிலார் (270) உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (724) உண்டி சுருங்கில் உபாயம் பலவுள (735) உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம் (1823) ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (2104) சித்தாந்தத்தே நிற்போர் முத்தி சித்தித்தவர் (2394) சிவசிவ என்னச் சிவகதி தானே (2716) பதியினைப்போல் பசுபாசம் அநாதி (115) பெண் கொடியாக நடந்த துலகே (1142) முப்புர மாவது மும்மல காரியம் (343) முதலிய பல நினைவிற்கு வருகின்றன.

18696



திருமூலர் திருநாளன்று, ஒவ்வொருவரும் பெரிய புராணத்துள் திருமூலநாயனார் புராணத்தை ஓதியும், திருமந்திரத்துள் சிறந்த பல பாடல்களைப் படித்துத் தியானம் செய்தும், குருபூசை நடக்கும் இடங்கட்குச் சென்று தொண்டாற்றியும், வேறு பலவழிகளிலும் கலந்துகொள்வார்களாக. திருமூலர் திருவடி வாழ்க.

---

# சைவப் பெருமக்கட்கு ஒரு விண்ணப்பம்

[ ச. சச்சிதானந்தம் பிள்ளை ]

சைவ சித்தாந்த மகாசமாஜம் என்னும் தனிப்பெரும் சைவ சபை 1905-ம் ஆண்டில், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில், அவர்கள் பூரண ஆசியுடன் மறைமலையடிகளாரால் தொடங்கப் பெற்றது. J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள், C. சிங்காரவேலு முதலியாரவர்கள் முதலிய பெரியோர்கள் இம் முயற்சிக்குப் பேரூக்கமளித்தனர். சென்ற ஐம்பதாண்டு காலமாக இம் மகா சமாஜம் செய்து வந்துள்ள சமயத் தொண்டுகள் தமிழகத்திற்கு நன்கு தெரிந்தவை. இதன் ஆண்டு விழாக்கள் வருடந் தவறாமல் தமிழகத்தின் பல்வேறிடங்களிற் பெருஞ் சிறப்புடன் நடந்து வந்துள்ளன. அவற்றில், தமிழகத்திலும் ஈழ நாட்டிலுமுள்ள சைவ அறிஞர்கள் பலரும் பங்குகொண்டு பணியாற்றியுள்ளனர். இயன்றபோதெல்லாம் மாதக் கூட்டங்களையும் வெவ்வேறு ஊர்களிற் கூட்டி, கிராம மக்களிடையே சைவ உணர்ச்சியைச் சமாஜம் வளர்த்து வருகிறது.

இதுமட்டுமன்றி, 1912-ம் ஆண்டின் ஆரம்பத்தில் "சித்தாந்தம்" என்னும் மாதப் பத்திரிகையொன்று தொடங்கப்பெற்றது. இதன் முதற்பத்திராதிபர், சித்தாந்த சரபம்-அஷ்டாவதானம்-பூவை - கலியாணசுந்தர முதலியாராவர். இப்பத்திரிகை இடையில்சில்லாண்டுகள் நீங்க* இன்றளவும் நடைபெற்று வருகின்றது. சைவத்தை ஆங்கிலத்தின் வாயிலாக வெளிநாடுகளிற் பரப்பிய J. M. நல்லசாமிப்

---

*1920 இறுதி சில மாதங்கள் முதல் 1927 டிசம்பர் வரை இப்பத்திரிகை வெளிவரவில்லை. (பத்திராசிரியர்)

R673 … N55.25.10

பிள்ளையவர்கள், நெல்லை S. பால்வண்ண முதலியாரவர்கள், ஊர - சண்முக முதலியாரவர்கள், இருக்கம் - ஆதிமூல முதலியாரவர்கள், தூத்துக்குடி - பொ. முத்தைய பிள்ளையவர்கள், பண்டிதை - அசலாம்பிகையம்மாள் முதலிய பல சைவ அறிஞர்கள் முதலாண்டிலேயே இதற்கு அரிய பல கட்டுரைகள் வழங்கி ஆதரித்தனர். பின்பும் பல அறிஞர்கள் இம்முறையில் கடந்த பல ஆண்டுகளாக இப்பத்திரிகையைப் பேணி வருகின்றனர்.

அன்றியும், இச் சமாஜம் பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், பல சங்க நூல்கள், சீவக சிந்தாமணி முதலிய பெரு நூல்களைச் சிறந்த முறையில் அச்சிட்டு அடக்கவிலைப் பதிப்புகளாகத் தமிழகத்திற்கு அளித்து நலம் பெருக்கியுள்ளது.

1929 ல் இம் மகா சமாஜம் செய்த தனிச்சிறப்புடைய சமயப்பணியொன்று தமிழ்நாட்டுச் சமய சரித்திரத்தில் தவறாது குறிக்கப்பெறும் பெற்றியுடையது. அது என்னெனில், சைவப் பெரியார் தனிக்கூட்டம் என்னும் விசேட ஆராய்ச்சிக் கூட்டத்தை நெல்லையில் கூட்டியமையாகும். அக்காலத்தில் சைவத்தையும் சாத்திரங்களையும் இழித்துரைக்கும் ஓர் இயக்கம் வலுப்பெற்றிருந்தது. மேற்சொன்ன தனிக்கூட்டம் பல சைவ சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்டு நிகழ்ந்தது. அது சைவ சமயத்தின் அடிப்படை உண்மைகள் எவை என்பதை நன்காராய்ந்து அவற்றை இக்காலத்தவர்க்குத் தெளிவாகவும் திட்டமாகவும் எடுத்துரைத்தது. அது நிகழ்ந்த இரண்டு மாதங்கட்குள், மகா சமாஜம் சைவர் மாநாடு ஒன்றை ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அருளாதரவு கொண்டு, மறைமலையடிகளார் தலைமையில் ஆறு நாள் திருப்பாதிரிப்புலியூரிலேயே நடத்தியது. அதில் சைவப் பெரியார் தனிக்கூட்டம் செய்த தீர்மானங்கள் யாவும் பரிசீலிக்கப்பெற்று, சிவ சின்னங்களணிவது பற்றிய ஒரு புதுத் தீர்மானத்துடன் அங்கீகரிக்கப்பட்டன. இம் மகா சமாஜத்தின் முயற்சியால் சைவ உலகிற்கு அப்போது அளிக்கப்பட்ட இவ் விளக்கம் பெருநன்மை தந்தது.

இவ்வாறு பல்லாண்டுகளாகச் சைவப்பணி புரிந்து வந்துள்ள இம் மகா சமாஜத்தின் முதலாண்டு விழா, சர். பொன்னம்பலம் ராமநாதனவர்கள் சீரிய தலைமையில் சிதம்பர தலத்தில் பெருஞ்சிறப்புடன் நிறைவேறியது. அணிமையில் நடந்த மகா கும்பாபிஷேகத்தால் தெய்வப்பொலிவு மிக்கு விளங்கும் அதே திருத்தலத்தில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பொன் விழாவையும் நடத்தி வைக்க ஆங்குள்ள சைவப் பெருமக்கள் அன்புடன் முன்வந்துள்ளமை பொன்னம்பலவர் திருவருட் செயலே என்று போற்றத் தக்கதன்றோ!



வெளிநாட்டு மதத்தினர் ஒரு சாரார் நமது பாரத தேசத்துப் பண்பையும் சமயத்தையும் அடியோடு ஒழித்து விட்டுத் தமது குறுகிய மதக் கோட்பாட்டையும், அறிந்தோ அறியாமலோ ஓரளவு அந்நிய நாட்டு ஆதிக்கத்தையும் நிலைநாட்டப் பல வழிகளில் வேலை செய்துவருகின்றனர். எல்லா நாட்டு மக்களும் ஒரு குடும்பத்தினர் போல் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டிய இந்த யுகத்தில், சமயத்தின் பேரால் இப்படிப் பிளவுகளையும் அழிவையும் ஏற்படுத்துதல் அடாத செயலாகும். எம் மதமும் சம்மதம் என்று எல்லா மதங்களையும் தன்னுடன் இணைத்துக் காணும் நம் சமரச சன்மார்க்க சமயமே உலக ஒற்றுமைக்கு ஒத்ததாகும். ஆதலால், இமய முதல் குமரி வரையில் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக நிலவி வரும் இச் சமரச சமயத்தை எவரும் அழிக்கவொட்டாதபடி பாதுகாத்து வளர்த்தல் இந்துக்கள் அனைவர்க்கும் தலையாய சமயக் கடமையாகும். ஆதலால், சிதம்பர மகா கும்பாபிஷேகம்போல், இப் பொன் விழாவும் இத்தலத்தில் எல்லாச் சிறப்புடனும் இனிது நிறைவேற அன்பர்கள் யாவரும் மனமகிழ்வுடன் பல்லாற்றானும் உதவி புரியும்படி வேண்டுகின்றேன்.

சைவ சித்தாந்த மகா சமாஜப் பொன்விழாவின் ஓர் அங்கமாகப் பொன்விழா மலர் ஒன்றை வெளியிடுதலும் அவசியம் என்று பல அன்பர்கள் கருதுகின்றனர். இம்மலரில், மகா சமாஜப் பணிகள், சைவ சித்தாந்த உண்மைகள், மக்கள் இக்காலத்தில் சீரியவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டவல்ல அறிஞர் கட்டுரைகள், பொருத்தமான படங்கள் முதலியவை இடம் பெறும். இத்தகைய மலரை மிக உயர்ந்த முறையில் அச்சிடுதற்குப் பெருந்தொகைதேவையாயிருக்கும். அறிஞர்கள் சிறந்த கட்டுரைகள் அனுப்பியும், செல்வர்கள்

பொருளுதவி செய்தும் இப் பொன்மலர் உரிய பொழுதில் வெளி வருதற்கும் உதவும்படி விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன்.*

பொன் மலருக்குக் கட்டுரைகளைச் சேகரித்து ஆய்ந்து அச்சிடும் பொறுப்பைத் திரு. C. M. இராமச்சந்திரம் செட்டியார், B.A., B.L., (Retd. Commissioner, H. R. E. Board) அவர்கள் அன்புடன் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.† கட்டுரை அனுப்புவோர் அவர்களுடன் நேரே கடிதப்போக்கு வரவு செய்யலாம். அம்மலரில் வாணிப விளம்பரஞ் செய்ய விரும்புவோர்களும் திரு. செட்டியாரவர்கட்கே எழுதலாம்.

இம்மலர் வெளியீட்டிற்கென்று நன்கொடைகள் அனுப்பும் அன்பர்கள், அவை பொன்விழா மலர் வெளியீட்டிற்கென்பதைக் குறிப்பிட்டு, அவற்றைத் "திருவாளர் ரெத்தினசாமி செட்டியாரவர்கள், நகை வியாபாரம், நடராஜ விலாசம், சிதம்பரம்" என்னும் விலாசத்திற்கு அனுப்பலாம்.

தமிழகத்திலும் பாரதத் திருநாட்டிலும் மீண்டும் சிவ மணம் கமழவும், அதனால் உலக நலம் பெருகவும் ஒரு நல்ல சாதனமாய்ப் பயன்படக்கூடிய இந்த ஞான தானத்தை வழங்குதற்காகத் தமிழக அன்பர்கள் தங்கள் தங்களால் இயன்ற நன்கொடை அளிக்கும்படி அன்புரிமையுடனும் பணிவுடனும் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்"

*இப்படி உதவும் சமாஜத் தொடர்புடைய அன்பர்களில், ரூ. 25/- நன்கொடையா யளிப்போர் உருவப்படங்களை இப் பொன்விழா மலரில் வெளியிடச் சமாஜச் செயற்குழு விரும்புகிறது. இவர்கள் தமது புகைப்பட 'பிளாக்'கையும் நன்கொடைத் தொகையுடன் அனுப்பி உதவும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

† அவர் முகவரி: 4/89, திருச்சிப்பாதை, கோயம்புத்தூர் P.O.

# அகலும் அகமும்

R. பஞ்சநதம் பிள்ளை

மங்கலப் பொருள்களில் விளக்கு ஒன்று. விளக்கம் செய்வது விளக்கு. இருளைப்போக்கி ஒளிதருவது. வீட்டுக் கழகு விளக்கு. முன் காலத்தில் விளக்கு வைப்பதற்கென்றே வீட்டுக்கு முன்னே முக்கோண மாடங்கள் அமைப்பதுண்டு. இம் மாடங்கள் திருவண்ணாமலையை நினைப்பூட்டும் என்பர் ஆன்றோர். இம்மாடங்களில் அகல் விளக்குகளை அழகாக - கண்ணுக்குக் குளிர்ச்சியாக ஏற்றி வைப்பார்கள். கார்த்திகை மாதத்தில், மின் விளக்கு எரிக்கும் தற்காலத்திலும் பல அகல் விளக்குகள் வரிசையாக ஏற்றிவைக்கப் படுகின்றன. அவை "சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே" என்ற வரியை நினைப்பூட்டும். மலைமேலிருந்து பார்க்கும்போது பூமியும், விளக்குகளும், மின்னும் விண்மீன்களும் போலக் காணப்படும். அகல் விளக்கில் அகல், எண்ணெய், திரி ஆகிய மூன்றும் ஒன்றுக் கொன்று ஆதாரமாய் விளங்குகின்றன. விளக்கு எரிவதற்குத் திரியும், திரிக்கு ஆதாரமாக எண்ணெயும், எண்ணெய் தங்குவதற்கு அகலும் உள்ளன. அகலில்லாத போது எண்ணெய் இல்லை. திரியில்லை, விளக்கில்லை, விசேட நாட்களில் வீட்டுக்கு வெளியே பல அகல் விளக்குகளையும், உள்ளே குத்து விளக்கு, இலக்குமி விளக்கு முதலியவைகளையும் ஏற்றி வைக்கிறோம். கோயில்களில் பெண் விளக்கேந்தி நிற்பது போன்ற பாவை விளக்குகளும் உண்டு. இரவும் பகலும் அணையாத நந்தா விளக்குகள் சந்நிதியில் ஏற்றப்படுவதுண்டு. விளக்குகளாலேயே திருவாசி அமைக்கப்படுகிறது. வடநாட்டில் ஓர்நாளில் கங்கையில் நிறைய விளக்குகளை ஏற்றிவைத்து மிதக்க விடுகிறார்கள்.

இத்தகைய பல விளக்குகளில் அகல் விளக்கின் மூலமாகப் பெரியோர்கள் பல நீதிகளை அறிவித்திருக்கிறார்கள். இவ்விளக்கு, புறத்தே உள்ள இருட்டைப் போக்கி வெளிச்சத்தைத் தருவதுபோல உடம்பின் அகத்திலும் ஓர்விளக்கை ஏற்றி ஞான ஒளியைப் பெறவேண்டுமென்று திருநாவுக்கரசர் காட்டுகிறார். உடம்பை வீடாகவும், உள்ளத்தை

அகலாகவும் உணர்வை நெய்யாகவும் உயிரைத் திரியாகவும் அமைத்து ஞானத்தீயை ஏற்றி வைத்து உள் நோக்கினால் சிவபெருமான் திருவடியைக் காணலாம் என்ற அனுபவ முறையை ஓர் பாடலில் குறிப்பிடுகிறார்.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே."

மற்றோரிடத்தில் திருநாவுக்கரசர் இவ்வக விளக்கெரிவதற்குத் தடையாயுள்ள ஐம்பொறிகளைப் பற்றிக் கூறுகிறார். பொதுவாகக் காற்றே இல்லாத இடத்திலும், காற்று மிகுதியாக வீசுமிடத்திலும் விளக்கு எரியாது. காற்றும் சிறிது வேண்டும். பெருங்காற்றுங்கூடாது. அதுபோல உடம்பின் அகத்தில் ஏற்றும் ஞான விளக்கினுக்கு ஐம்பொறிகளின் உதவியும் வேண்டும். மெய்வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள் தத்தமக்குரிய கடமைகளை இறைவனிடம் கொண்டு சேர்க்கும் நற்செயல்களைச் செய்ய வேண்டும். உறுப்புக்களின் கடமைகள் இன்னின்ன என்பதை அப்பர் பாடிய திருவங்கமாலைப் பதிகத்தில் காணலாம். இவ்வாறு அகவிளக்கு நன்றாய் எரிவதற்கில்லாதபடி ஐந்து இந்திரியங்களும் வலிமை கொண்டு தாம் போன போக்கில் சூறையாடிச் செல்கின்றன. இதனால் விளக்கெரிவதற்கில்லை. மனம் ஒன்றி நின்று இறைவனைக் காணுதற்கு இந்திரியங்களைக் காத்துக் கட்டுப்பாடு செய்யவேண்டும். "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்" என்றபடி இந்திரியங்களாகிய யானைகளை மெய்யுணர்வாகிய அங்குசத்தால் அடக்கவேண்டும். இவ்விதம் அடங்கவேண்டிய இந்திரியங்கள் அடங்காமல் வலிமையாய் இருப்பதால் அக விளக்கு எரிவதற்கில்லையே, அவர்களையும் உடன் வைத்தீரே, அவர்கள் வலியராயினர் என்று ஓர் பாடலில் காட்டுகிறார்.

"மெய்யுளே விளக்கையேற்றி வேண்டள வுயரத்தூண்டி
உய்வதோர் உபாயம்பற்றி உகக்கின்றேன் உகவாவண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர்சாலச்
செய்வதொன்றறிய மாட்டேன் திருப்புகலூரனீரே."



மற்றோரிடத்தில் "இல்லக விளக்கது இருள் கெடுப்பது சொல்லக விளக்கது நமச்சிவாயவே" என்று கூறுகிறார். அண்ணாமலை ஒளியைச் சிவப்பிரகாசர் "கண்டவர் அகத்திருள் அனைத்தையும் நீக்கும் சோணசைலனே" என்று கூறுகிறார்.

இவ்வாறே திருமாலடியார்களாகிய ஆழ்வார்களும் அகல் விளக்கைப் போலவே அக விளக்காகிய ஞான விளக்கையும் ஏற்றி வைக்கிறார்கள். பூதத்தாழ்வார் "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி ஞானச்சுடர்விளக் கேற்றினேன்" என்கிறார். மற்றொருவர் பொய்கையாழ்வார் "வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக, செய்ய சுடராழியா னடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்று பாடுகிறார்.

புதுமையான நாகரிகச் சூழ்நிலையில் மின் விளக்கின் நடுவில் வாழ்ந்துவரும் இக்காலத்தில் அகல் விளக்கின் தன்மைகளையறிந்து அக விளக்கை ஏற்றி வழிபட முயலுவோமாக.

# கோமதி அந்தாதி

அம்பை – சங்கரனார்

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியில் சிறுநூல் வகைகள் 96 வகைப்படும். (பிரபந்தங்கள் என்பர் வடநூலார்) அவற்றுள் அந்தாதி என்பதும் ஒன்று. பழங்காலத்தில் நம் தமிழ்ப்பெரியார்கள் தமிழ் போதிக்கும் வரிசையில் அந்தாதிக்கும் தக்க இடங்கொடுத்து மாணவர்களுக்குப் போதித்து வந்தனர். அதனால் அங்கங்குள்ள தலங்களின் பெருமைகளைப்பற்றிப் பல பெரியோர்கள் அந்தாதி நூல்கள் பாட முற்பட்டனர். அவைகளில் தலையாயவை அருணகிரியந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருப்புகலூரந்தாதி, சங்கர நயினார் கோயிலந்தாதி முதலியனவாம்.

இவைகளைப் போன்றே கோமதியந்தாதி என்ற நூலும் தோன்றியது. இது பாண்டிநாட்டிலுள்ள சங்கர நயினார் கோவிலில் அருட் சத்தியை மக்களுக்குப் பாலித்துக்கொண்

டிருக்கும் கோமதியம்மையைப்பற்றிப் பாடப்பெற்றது. இத்தலத்திலுள்ள பெருமானுக்குக் கூழைப்பிரான், சங்கரர், சிவசங்கரேசர், சங்கரநாராயணர், சங்கரலிங்கர், ஆவுடை நாயகர் முதலிய பல பெயர்களுண்டு. அம்பிகைக்கு ஆவுடை, ஆவுடைநாயகி, ஆவுடைத்தோகை, ஆவுடைமாது, ஆவுடையாள், கோமதி முதலிய பெயர்கள் வழங்குகின்றன. ஆவுடை என்ற தமிழ்ப் பெயரையே கோமதி என்று வடமொழியில் வழங்குகின்றனர். ஆ எனினும் கோ எனினும் பசுவைக் குறிக்கும். உலகிலுள்ள பசுக்களாகிய ஆன்மாக்களுக்குத் தாயானவள். ஆதலின் அவ்வம்மையை ஆவுடையாள், கோமதி என்ற பெயர்களால் ஆன்றோர் அழைத்தனர்.

பாண்டி நாட்டிலுள்ள பஞ்சபூதத்தலங்களுள் இச் சங்கர நயினார் கோயில் பிருதிவி தலமாகும். சிவபெருமானுக்குரிய 64 உருவங்களுள் சங்கரநாராயண உருவம் இத்தலத்திலேயே உள்ளது. இக்கோயிலில் சங்கரேச்சுரர் சந்நிதி, கோமதியம்மை சந்நிதி, சங்கர நாராயணர் சந்நிதி என்ற முப்பெருஞ் சந்நிதிகளுள. இம்மூன்று சந்நிதிகளிலும் மிகவும் பெருமை பெற்று விளங்குவது கோமதியம்மையின் சந்நிதியே யாகும். அதனாலேயே இன்றும் கோமதித் தாயின் சந்நிதியில் பேயாலும் நோயாலும் நலிவுற்றோர்கள் கூடி அவ்வம்மையை வாழ்த்தி வணங்கி அவளருள் பெற்று நோயினீங்கிச் செல்கின்றனர்.

பன்னிரண்டாண்டுகட்கு முன்னர் யான் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பா சமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியரா யிருந்தேன். அப்போது ஒருநாள் காலையில் ஒரு பெரியார் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் அம்பைக்கு அருகிலுள்ள இடகால் என்ற ஊரிலுள்ளவர். பரம்பரையாகவே தமிழில் ஆழ்ந்த புலமை மிக்க கால்வழியில் தோன்றியவர். குமாரசாமிப் புலவர் என்ற பெயரினர். அப்பெரியாருடைய தொடர்பு பின்னர் பல நாட்களும் எனக்குக் கிடைத்தது. ஒருநாள் அப்பெரியாருடன் நான் பல செய்திகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது ஓலைச்சுவடிகளைப்பற்றிய பேச்சும் வந்தது. அப்பொழுது "என்னிடம் சில சுவடிகள் உள்ளன" என்று அவற்றைக் கொண்டு வந்தார். அவை



களில் பல, சிறந்த நூல்களே. அவைகளில் ஒன்றில் "கோமதியந்தாதி, அண்ணாமலை இரட்டியார் இயற்றியது" என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் அப்பெரியாரின் துணைகொண்டே அன்று முதலே அச்சுவடியை ஒரு குறிப்பேட்டில் பெயர்த்தெழுத முற்பட்டேன். பெரும்பாலும் அந்தாதிகள் நூறு செய்யுட்களைக் கொண்டிலங்குவது வழக்கம். அதே போன்று இந்நூலும் நூறு பாட்டுக்களைத்தான் பெற்றிருக்க வேண்டும். அப்படியிருக்க நம் துரதிர்ஷ்டவசத்தால் அவ்வேட்டுச் சுவடியில் 44 பாட்டுக்களே யிருந்தன. அவைகளை அப்படியே பிரதி செய்து கொண்டு எஞ்சிய பகுதி யாண்டாவது கிடைக்க இயலும் எனப் பல்லிடத்தும் விசாரிக்க முற்பட்டேன். அது கிடைத்தற்கில்லை. இனியும் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கை கொண்டே நம் சித்தாந்த இதழ் வாயிலாக இச் செய்தியை வெளியிடலானேன். எஞ்சிய பகுதியை யாராவது கண்டோ அல்லது கேட்டோ இருக்கின் தயைகூர்ந்து தெரிவித்தருளின் முழுவதும் சேர்த்து வெளியிட்டுத் தமிழுலகுக்குப் பயன்படச் செய்யலாம்.

கோமதியந்தாதியிலுள்ள சில பாடல்கள் வருமாறு:—

8. நான்புரி யேன்கொடும் பாவமல்லால்வினை
நாளுங் கொலை
நோன்புரி யேன்துய ருந்தவிர்த்தாண்டதை
நோக் குறுங்கால்
வான்புரி யேன்?மலர்ப் புன்னைமின்யாரையும்
வாழ்வித் தல்பொய்
ஏன்?புரி யேன்?கதை யேன்?பக
டேன்?நா கேனமனே.

14 புராதனி யம்ப ணிலகந் தரிபுன்னைப் பொன்னெஞ்சகம்
ஓராதனி யம்பணி யஞ்சடை யார்பங்கி லுத்தமியே
இராதனி யம்பணி சுற்றுச ரீரமென் றெண்ணித்தொழ
வாராதனி யம்பணி நிற்பார்க்கென றேகதி வாய்ப்பதுவே.

16. பேதைய ராவலை மாற்றேம் அவர்தம் பெரும்நிதம்ப
வாதைய ராவலைக் கததளர்ந் தேங்கன்றின் வாளைமுட்ட
ஓதைய ராவலைப் பால்சாய்க்கும் புன்னைமின்! ஊழ்வன்கருந்
தாதைய ராவலை யென்றால் அருளாத தாயுய்யமே.

# "களேபரம்"

புலவர்-முருகவேள், B.O.L.

நாம் பேசும்போதும் எழுதும்போதும் பல சொற்களை வழங்குகின்றோம். ஆயினும், அவற்றில் ஒரு சில சொற்களுக்குக்கூட உண்மையான பொருள் இதுவென்று நமக்குத் தெரிவதில்லை. தொழில் செய்வோன் ஒருவன் தன் தொழிற்குப் பயன்படும் கருவிகளின் பலதிற அமைப்புக்களையும் நன்குணர்ந்து கொண்டாலன்றி அவற்றினைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டு நலம்பெறுதல் இயலாதவாறு போல, மக்கள் தாங்கள் வழங்கும் சொற்களின் பலதிற அமைப்புக்களையும் நுட்பங்களையும் உணர்ந்து வழங்காமற் போவராயின், அதனால் அவர்களுக்கு விளையும் நலமும் ஓரளவு புரைபடுதல் திண்ணம். அதுபற்றியே,

"திறனறிந்து சொல்லுக சொல்லை, அறனும்
பொருளும் அதனினூங் கில்"

எனத் திருவள்ளுவர் கூறினர் போலும்! சொற்களின் அமைப்புகள் பலவற்றையும் ஆராய்ந்துணர்ந்த பேரறிஞர்கள் பலர், சொற்கள் தமக்கென ஒவ்வொரு காரணமும் வரலாறும் உடையன என்றும், இன்று நாம் வழங்கிவரும் சொற்களில் பண்டைய மக்களின் சமய சமூக அரசியல் நிலைகளை விளக்கும் குறிப்புக்கள் பலவும் அமைந்து கிடக்கின்றன என்றும், அவைகளையெல்லாம் ஆராய்ந்து அறிந்து மகிழ்ந்து தக்கவாறு வழங்கி வருவதே அறிவுடைய மக்களின் கடமையாகும் என்றும் பலபட விரித்துரைப்பர்.

"களேபரம்" என்னும் சொல்லினை நாம் பலகாற் கூறியும் கேட்டும் வந்திருக்கின்றோம். ஆயினும் அச்சொல்லைப் பற்றிய செய்தி எதுவும் நமக்குத் தெரியாது. எத்துணையோ பலப்பல சொற்களைத் திறனறியாமலும் பொருளுணராமலும் வழங்கி வருதல் போலவே, "களேபரம்" என்னும் சொல்லையும் நாம் ஏதோ ஒரு வகையாக வழங்கி வருகின்றோம். இச் சொல்,

"மக்களே மணந்த தாரம் அவ்வயிற் றவரை ஓம்பும்
சிக்குளே அழுந்தி ஈசன் திறம்படேன் தவமதோரேன்
தொப்புளே போலத் தோன்றி அதனுளே மறையக் கண்டும்
இக்களே பரத்தை ஓம்ப என்செய்வான் தோன்றினேனே"



"பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"

எனவரும் திருநாவுக்கரசர் பாடல்களில் பயின்று வந்துள்ளது. "களேபரம்" என்னும் சொல் உடல், எலும்பு, பிணம் என்னும் பொருள்பட இப்பாடல்களில் அமைந்துள்ளது. தாறுமாறு, சிக்கல், ஆரவாரம், குழப்பம் என்னும் இன்னோரன்ன பொருள்களில் பேச்சு வழக்கில் களேபரம் என்னும் சொல் இன்று வழங்கிவருகின்றது.

"சொற்களுக்குக் காரணமும் வரலாறும் உண்டு. அவைகளால் பண்டைய மக்களின் சமய சமூக அரசியல் நிலைகளை உணர்ந்து கொள்ளலாம்" எனக் கூறும் மொழிநூலாரின் ஆய்வு முறைகொண்டு களேபரம் என்னும் சொல்லை நோக்கினால், இது "களபரர்" என்னும் சொல்லினின்று தோன்றியதாகலாம் எனக் கருத வாய்ப்புளது.

ஏனெனில், களபரர் அல்லது களப்பிரர் என்பார் நாடோடிகளாய் ஓரிடத்தும் நிலையாகத் தங்காமல் மக்களைச் சூறையாடுவதே தொழிலாகக் கொண்டிருந்து குழப்பம் விளைத்து வந்த கூட்டத்தினராவர். பல்லவர்களுக்கு முன்பே அவர்கள் தமிழகத்திற் புகுந்து சங்ககால வாழ்வைச் சீரழித்தனர். தமிழகத்திற் குழப்பம் விளைத்துத் தமிழர்களின் பொருள்வளங்களைச் சூறையிட்டுக் கலைகளை அழித்து, வாணிகத்தைக் கெடுத்து, அரசியலை அலைக்கழித்துச் சமயநெறியைத் தாக்கிக் கேடு சூழ்ந்தவர்கள் களபரர்களே என அறிஞர்கள் கருதுகின்றனர். மூர்த்தி நாயனார் வரலாற்றிற் சேக்கிழார் குறிப்பிடும் கருநட மன்னன் களபரனே யாதல் வேண்டும்! கலியர் - களவர் - களபரர் - களப்பிரர் எனப் பலவகையில் இவர்கள் வழங்கப்படுவர். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குப் பின்னர்த் தமிழ்நாட்டின் பல பகுதிகளிற் புகுந்து கொலை கொள்ளை முதலியவற்றாற் குழப்பம் விளைத்த குறும்பர்கள் ஆகிய இவர்களைப் பாண்டியன் கடுங்கோனும், சிம்ம விஷ்ணு முதலாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னர்களும், விக்கிரமாதித்தன் விசயாதித்தன் என்னும் மேலைச் சளுக்கிய அரசர்களும் வென்று

புறங்கண்டனர். பாண்டியன் கடுங்கோன் என்பவன் சற்றேறக்குறைய கி. பி. 550-ல் களபரர்களை வென்று, தன் நாட்டைக் கைப்பற்றி மீண்டும் ஆளத்தொடங்கியதாக வேள்விக்குடிச் செப்பேட்டால் அறிகின்றோம். இக்களபரர்கள் உண்டாக்கிய குழப்பமே பண்டைய மக்களால் களேபரம் என வழங்கப்பட்டிருத்தல் கூடும். கலவரம் கலாபனை போன்ற சொற்களும் 'களேபரம்' என்பதன் இனமாய சொற்களே யாதல் காணலாம். களபரர்களை அடுத்துப் பின்வந்த பல்லவர்களின் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர், களேபரம் என்னும் சொல்லை வழங்கியிருத்தல் இயல்பேயாதலின், அது பண்டைத் தமிழகத்தில் களபரர்கள் விளைத்த குழப்பத்தினை அறிவிக்கும் சான்றாக இன்றும் நின்று நிலவித் தேவாரப் பாடல்களில் விளங்கிக் கொண்டிருப்பது, நம்மனோர்க்கு வியப்பும் விம்மிதமும் விளைவிக்கின்ற தன்றோ! [சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பேரகராதியில் இவ்வாறு குறிக்கப் படவில்லை.—பத்திராசிரியர்.]

---

# வேதகிரீசுரர் பதிகம்

கொ. நீ. சிங்காரவேலு, M. A.

சிதம்பரசுவாமிகள் 300 ஆண்டுகட்கு முன் இருந்தவர். இவர் மதுரையில் சைவ குலத்தில் தோன்றியவர். குமாரதேவர் என்னும் பெரியாருடைய மாணாக்கர். குமாரதேவரின் கட்டளையின்படி திருப்போரூர் ஆலயத்தைப் புதுப்பித்து, திருப்போரூர் சந்நிதிமுறை என்னும் அரிய நூலைப் பாடியவர். அன்றியும் இவர் நெஞ்சை அள்ளும் பல அற்புத நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் திருக்கழுக்குன்றத்து வேதகிரீசுரரைப் போற்றிப் பாடிய பதிகம் ஒன்று. இது பத்துச் செய்யுட்களால் ஆனது.

நமது நாட்டில் சமயம் வேறு, தத்துவம் வேறு அல்ல. சமயம் தத்துவத்தையும் தத்துவம் சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஒருவகையில் தத்துவத்தின் செயல் முறையே சமயம் என்று சொல்லலாம். இக்காரணம் பற்றியே தோத்திரப் பாக்கள் எல்லாம் தத்துவம் நிரம்பப் பெற்றுள்ளன. அப்பாடல்கள் நம் அறிவுக்கும்



உணர்வுக்கும் ஒருங்கே விருந்தளிக்கக் கூடியவை. ஞானமும் பக்தியும் இரண்டறக் கலந்தவை.

சைவ சித்தாந்தம், தமிழர்தம் சமயம். மெய்கண்டார் காலத்திற்கு முன்னரே தொல்காப்பியந்தொட்டு நமது இலக்கண இலக்கியங்களில் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்கள் பாலில் நெய் போன்று மறைந்து விரவியிருந்தன. மெய்கண்டார் அக்கருத்துக்களைப் பண்டைய நூற்களினின்றும் கடைந்தெடுத்து ஒருருவமும் அமைத்தார். அவர் வழிவந்த சந்தான குரவர்களும் மற்ற அடியார்களும் சித்தாந்தக் கொள்கைகளை நம் சாத்திரப் பாக்களிலும் தோத்திரப்பாக்களிலும் நமக்கு விளக்கியுள்ளார்கள். மேற்குறிப்பிட்ட வேதகிரீசுரர் பதிகத்திலும் சித்தாந்தக் கருத்துக்களைப் பரக்கக் காணலாம்.

இப்பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு அரிய கருத்தைத் தன்னகத்தே உடையது. ஆசிரியர், வாழ்க்கைத் தத்துவங்கள் அனைத்தையும் இந்நூலில் பத்து கோணங்களிலிருந்து நமக்குக் காட்டுகின்றார் என்று கூறலாம். ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் மறைமலை இறையை, 'பிறவிப் பிணிபோக்கும் மருத்துவனும் இறையே, சடா முடிக்கனியே' என்று உருக்கமாக விளித்து விண்ணப்பிக்கின்றார்.

இப்போது முதல் பாட்டைப் பார்ப்போம். ஆண்டவனை மேற்கூறியபடி "வேதகிரிப் பவரோக வயித்திய ·வேணி முடிக்கனியே" என்றும், மலர்மாலை சூடிய (அருளுருவாம்) அம்பிகை பாகனே, மலைபோன்றவனே என்றும் விளிக்கின்றார்; விளித்து, "சிந்தையில் உன்தனை மறவாதவர் தலைமத்தெறுவார் யார்?" என்று கேட்கின்றார். அவர்களை அழிப்பது ஆண்டவனாலும் இயலாது என்பது போன்று குறிப்பாக உணர்த்துகின்றார். அதற்குச் சான்றாக சிவபெருமான் முப்புரமெரித்த போதும் அப்புரங்களில் வசித்த சிவனடியார்களான சுதன்மன், சுபுத்தி, சுசீலன் என்ற மூவர்களும் அழிந்தார்களில்லை என்பதைக் குறிப்பிடுகின்றார். இறைவனின் பேராற்றலையும் விஸ்வரூப தரிசனத்தையும் முப்புரமெரித்ததன் வாயிலாக உணர்த்துகின்றார். மேருவை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், திருமாலை அம்பாகவும், இவ்வுலகத்தைத் தேராகவும், சூரிய

பக்தர் பக்திமேலீட்டா லெடுத்து நெற்றியி லிட்டுக்கொள்
வதுபோல இராமேசுரத்து வெண்மிருத்திகைபோ லுண்
டாகுமண்ணை யாத்திரையிலுள்ளார் ஏகதேசந் தரிக்கும்படி
யெங்கேனுந் சொல்லியிருந்தால் அதனையுஞ் சித்திரோர்த்துவ
புண்டரத்திற்கு ஆதாரமென்னப் பார்க்கிறார். விவரமின்மை
யின் ஏலாது. இவ்வித யோசனையெல்லாம் அப்புண்டரம்
நூதனமென வொப்புக்கொள்கின்ற குருப்ரம்பரையாதி
வைணவர் புத்தகங்களுக்கு விரோதப்படுதலு மன்றிப்
பொய்யிற் புகுங் குற்றமுமாம். ஆதலால், எமது கொள்கை
அவைதிகமாயினும் எம்முன்னோரா லாசரிக்கப்பட்ட
படியே யெம்மாலும் ஆசரிக்கப்படுவதாயிற் றென்பதே
இவ்விடயத்தில் இராமாநுஜ வமிசத்தார்க்கு மேன்மைத்
தாகும். மற்றையர் இக்கொள்கைக் குடம்படல் பெரிய
அநியாயமேயாகும். அந்த இராமேசுர மிருத்திகை போன்ற
வெண்மிருத்திகை முதலியவற்றை விபூதி கிடையாதபோதும்
அவ்விபூதி போலத் தரிக்கொணுமென்ப துணர்த்துதற்கே
விஷ்ணு மூர்த்தியாற் சொல்லப்பட்ட கருட புராணத்திலும்
“ பஸ்மனைவப்ரகுர்வீதநகுர்யாந்ம்ருத்திகாதிபி :” எனும்
வசனமுமெழுந்தது. இவ்வித விதி கடந்து செய்யப்படு
கின்ற அம்மண் புண்டரமானதும், திருமாலினது கரிய
மேனிக் கிசையக் கறுப்பாயிராமல் வெள்ளையாயிருக்கும்
வழிப்பொருத்தமில தாகின்றது. அது கரிய புறப்பாதங்
காட்டாது அகப்பாதங்காட்டுமென்னின், ஆழ்வார் “மூவுல
களந்த சேவடியோயே” என்றபடி அகப்பாதஞ் செந்தா
மரை போல்வதாகலின் அதற்கும் பொருந்ாதன்றே.
பொருந்துமாறே துவித வைணவரான மத்துவ மதத்தினர்
கறுப்புரேகை யிடுகின்றார் போலும். திருமாலடியைத் திரு
மால் நெற்றியிலிடுவதுந் தகுதியன்று. அப்படியிடுதல் அநி
யாயமென் றுணருமாறு, மணவாள முனிவரது தென்கலை
நாமத்திற்கும் வேதாந்த தேசிகரது வடகலை நாமத்திற்கு
முண்டாகும் கலகங்கள் குறித்து “விவேகபாநு”வெனும்
பத்திரிகை, ௧-வது வால்யூம் ௨௬௪-ம் பக்கத்தில் “ தாம்
நெற்றியிலிடப்பெற்றசின்னத்தைப் பெருமான் நெற்றியிலும்



ஏற்றிவிட்டனர்” என்று வைணவரபிமானமுள்ள எஸ்.
ஆர். கிருஷ்ணமாசாரியார், பி. ஏ. எழுதியிருக்கின்றாரன்றோ?
ஊர்த்துவ புண்டரம் வாசுதேவோபநிஷத்திற் கூறப்பட
வில்லைகொலோ வெனின், அதில் மண்மஞ்சள் என்பவற்றா
லிடும்படி சொல்லப்படவில்லை. கோபிசந்தனத்தாலிட்டு
அது கீழாகுமாறு மேலே திருநீறு தரித்தல் வேண்டுமென்று
வாசுதேவரே நாரதருக்கு நவின்றுள்ளார். இவ்விடயம்
அவ்வுபநிஷத் தொன்றே கூறுதலின் அதுவும் வியனிலையா
காது. அவ்வூர்த்துவ புண்டரந் தனிப்படத் தரிக்கொணு
தென்பதை யுணர்த்துவதற்கே, பராசர புராணத்தில் “ அர
ஸெளதந்தூர்த்வபுண்ட்ராதிநைவதிர்யக்த்ரிபுண்ட்ரகம்” எனும்
வசனமெழுந்துள்ளது. இதனருத்தம் “வேதத்தில் ஊர்த்
துவ புண்டரஞ் சொல்லப்படவில்லை. ஆகையால் குறுக்கே
திரிபுண்டர மணிய வேண்டும்” என்றாம். திருவிளை
யாடற் புராணம் விருத்தகுமார பாலரான படலத்தில்
“மண் மாசுபடப் பூசும் வடிவுடையார்” என வருவதி
லுள்ள மண் இராமாநுஜருடைய சித்திரோர்த்துவ புண்டர
மன்று. இராமாநுஜரின் முற்பட்டவராய்க் கௌதமர் முத
லிய முனிவர்களிட்ட சாபத்திலகப்பட்டவரா யுள்ளவருட்
சிலர் ஏற்றபடி பூசிக்கொள்ளு மண்ணாம். அப்படலக்
கூற்றின் முதற்பாதம் “உண் மாசு கழுவுவது நீறென்றே
யுபநிடத முரைப்பக் கேட்டும்” என்றுளதும் இங்குணரற்
பாற்றே.

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி நீணகமெனுந்
தொடக்கத்துப் பத்தின் ௯-ம் பாட்டில், (2017) “கள்ளார்
துழாயுங்கண்வளருங்கூவிளையு-முள்ளார்முளரியும்**கண்டக்
காற்-புள்ளாயோ ரேனமுமாய்ப்புக்கிடந்தான் பொன்னடிக்
கென்-றுள்ளார்” எனவருதல் திருமாலருச்சனைக்குக் கூவிளை
யெனும் வில்வமும் உதவுமென்பதை விளக்குகின்றது. இதற்கு
விரோதமாக இப்போதுள்ள வைணவர் வில்வ நிந்தை செய்வ
தும், திருவரங்க முதலிய விஷ்ணு க்ஷேத்திரங்களில் இயற்கை
யுற்பத்தியாயிருக்கும் வில்வவிருக்ஷங்களை வெட்டி வெட்டி
யெறிவதும் அவை மீண்டு மீண்டு முளைத்தெழுதல் கண்டு

வயிற்றெரிவு கூர்வதும் என்னை? அப் பாட்டிற் குவளை யென்றப்பாலது "கூவிளை" என நீண்டதெனலாமோ வெனின், அங்ஙனம் 'கூவளை' எனவிருக்கவேண்டும். இல்லாமையாலவ்வாருகாது. இச் சந்தேகம் பற்றிப் பழையதும் புதுவதுமான கூ-பிரதிகளை யாஞ் சோதித்ததிலுங் கூவிளையெனவே யிருந்தமையாலும், "கூவிளம் வில்வமாலுரங் கூவிளை" எனப் பிங்கலநிகண்டுஞ் சேந்தன்திவாகரமுங் கூறுகின்றமையாலும் அது வில்வமேயாம். கு=பூமி. கூவென நீண்டது. கண்ணுருபு தொக்கது. விளையுமென்பதிலுள்ள உம்மை பெயரெச்சம் எனக் கொள்ளாணுது கொலென்னினும், அங்ஙனம் "குவ்விளையும்" எனவே யிருக்கலாம். ஓசையுங் கெடாதாகலின் அப்படியுமொண்ணுதென்க. அத் திவாகரம் "பீடுகண்பாழி***பெருமை" எனுமாற்ருனே கண்வளருங் கூவிளையென்பது பெருமை மிகுந்த வில்வமெனவாம். காண்டற்கினியவென்றலுமாம். இதனால் திருநீறு கண்டிகை தரிக்கும் விஷ்ணுமூர்த்தி சிவார்ச்சனைக்காய வில்வமுந் தரிப்பவரென்பது வெளியாயிற்று.

[ஆருவது அதிகார முற்றிற்று.]

---

## ஏழாவது அதிகாரம்

### (எ) விஷ்ணுமூர்த்தி திரிமூர்த்திகளிலொருவரேயென்றுழ்வா ரோப்புக்கொண்டாரென்பது.

திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி-தூம்புடையென்றற்ருெடக்கத்துப்பத்தின் கூ-வதுபாட்டில், "மூவரிலெங்கண்மூர்த்தி யிவனென முனிவரோடு - தேவர் வந்திறைஞ்சு நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே"(1296) எனவும், மேற்படி நிதியினையெற்றற்ருெடக்கத்துப்பத்தின் கூ-வதுபாட்டில், "மூவரிலொருவனை யொருவனை யுலகங்கொண்ட கோவினை"(2037) எனவும், பொய்கையாழ்வார் இயற்பா கடு-வது பாட்டில், "முதலாவார் மூவரேயம்மூவருள்ளுமுதலாவான்மூரிநீர்வண்ணன்" (2096) எனவும், வருபவைகளும் மேலதிகாரங்களிற் பாரிக்கப்பட்ட பல செய்யுள்களும் பிரமா விஷ்ணு உருத்திர



ரெனுமூவருளொருவராயுள்ளவரேநாராயணரென்றும், அவர் மற்றிருவரினு மேலானவரென்றும், விளக்குவனவாயின. ஆகவே, மும்மூர்த்திகளின் மேலேயொருதெய்வமில்லை என்றல் ஆழ்வார் கருத்தென்பதுந் தாபனமாகும். ஆயின், அது பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனும் இந்திராதி தேவர்களும் பூதங்களோடு பிறக்கின்ருர்கள், அவை யழியும்போதடங்குகின்ருர்கள், ஆதலால் அவர்கள் காரணராகமாட்டார்கள். சம்பு சப்தவாச்சியனே சர்வ காரணனெனும் அருத்தந்தரத்தக்க "ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தேஸம்ப்ரஸூயந்தேஸர்வாணிசேந்த்ரியாணிஸஹபூதைர்நகாரணம்காரணுநாம்த்யாதாகாரணந்துத்யேயஸ்ஸர்வைச்வர்யஸம்பந்நஸ் ஸர்வேச்வரச்சம்புராகாசமத்யே" எனும் அதர்வசிகோபநிஷத் வசனத்திற்கும், "ஸ்வரூபதேஜோமயசாச்வதம்சிவம்" எனும் மஹோபநிஷத்தானது 'பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனும் எல்லாப் பூதங்களோடுஞ் சிவத்தாற் படைக்கப்படுகின்றனர். வடவைத் தீயால் ஜலம் நாசமாவதுபோல அப்பூதங்களோடு அவர்களும் லயமே யடைகிருர்கள்' எனும் பொருளில் "ப்ரஹ்மாவிஷ்ணுச்சருத்ரச்சஸர்வாவாபூதஜாதய꞉| நாசமேவாநுதாவந்திஸலிலாநீவபாடபம்|" என்றிசைத்தற்கும் முன்னதிகாரங்களிற் காட்டப்பட்ட சுருதியாதி பிரமாணங்கட்கும், இனிக் காட்டப்படும் அவ்வித பிரமாணங்கட்கும் அவ்வாழ்வார் கருத்து விரோதமாகும். அதனுலவர்கள் பாடல் "முடிவான திராவிட வேதம்" எனற்கியையாது, பிரம விஷ்ணுக்களுக்கு மேலானவரே யுருத்திரரெனற்கும், இம்மூவருக்கு மேலே பரமசிவமுண்டென்றற்கும் முதலதிகாரத்திற்ருனே சில பிரமாணங்கள் காட்டினேம். அவற்றிற்கும் ஆழ்வார் கருத்து விரோதமாம்.

#### சங்கை நிவர்த்தி

"நாராயணபரம்பரஹ்மதத்வம்நாராயண꞉பர꞉|" என்ற சுருதிப்படி விஷ்ணு மூர்த்தியைப் பிரமம் என்று வேதங் கூறும்வழி ஆழ்வார் பாடல் முடிவான திராவிட வேதமாகலாமெனின், 'பிரமம்' என்பது 'பெரிது' எனும் பொருட்டு. அது குடிசைக்கு [illegible] மாளிகைக்கு

18698

அரண்மனை பிரமமென ஒழுங்குக் காட்டும் வழியாகத்தானே வேதத்திலு நின்று அன்னத்தாலாகு முடம்புக்கு அந்நம் பிரமமெனப் பாசப்பொருளைத் தீர்மானித்து அதன்மேல் ஆன்மாவான பசுப்பொருளைப் பிரமமென்று காட்டுவான் தேவர்கட்கு இந்திரன் பிரமம், அவ்விந்திரற்குப் பிரமன் பிரமமென்று பேசும். இந்தப் பிரம ஸ்தோத்திரங்கள் முடிவான வேதமானால், அந்தப் பிரமாவுக்குப் பிரமமாகின்ற விஷ்ணு ஸ்தோத்திரங்களும் முடிவான வேதமாகலாம். இவ்விஷ்ணுவாவார் பசுவர்க்கத்திலுள்ளா ரென்பதற்கு "எல்லாத் தேவரும் பசுக்கள்" எனும் அருத்தந் தரத்தக்க "ஸர்வே தேவா பசுதாமவாபு" என்ற பைப்பலாத சுருதி தானே "யேயாந் விஷ்ண்வாதிகாந்ஸுராந்" எனும் வசனத்தாலே விஷ்ணுமூர்த்தியுஞ்சுரர்களிலொருவரென்று வியக்தப்படுத்தலும், நிராலம்போபநிஷத்து "ப்ரஹ்மவிஷ்ணுவீசானேந்த்ராதீநாம்நாமரூபத்வாராஸ்தூலோஹமித்யத்யாஸவசாஜ்ஜீவ:" எனும் வசனத்தால் பிரமவிஷ்ணு ருத்திரேந்திரர்கள் ஜீவர்களெனச் சாதித்தலும், ஆதித்யபுராணம் "ப்ரஹ்மவிஷ்ணுஸுரேந்த்ராத்யா: பசவ:பரிகீர்த்திதா:|" எனும் வசனத்தால் பிரமவிஷ்ணு தேவேந்திராதியர் பசுக்களென முடிவுசெய்தலும், இன்னும் பல சுருதியாதி வசனங்களிவ்வாறு தீர்வையிடலுஞ் சான்றாகும். இப்படிப் பசுவான விஷ்ணுமூர்த்தி அஹங்கார ஸம்ஸார பந்தமுளா ரென்பதற்கு, ஜாபாலயுபநிஷத்தில் "அஹங்காராவிஷ்டஸ்ஸம்ஸாரிஜீவஸ்ஸஏவபசு:|" என வருதலே தக்க பிரமாணமாம். இப்படிப்பட்ட பசுவனைத்திற்கும் பதியாயுள்ளவர் பரமசிவனாரென்பது பின்வரு சுருதி முதலியவற்றானுந் தாபனமாகும். அதனால் முக்குண மூர்த்திகளிலொருவரான விஷ்ணு மூர்த்தியை வேதம் பிரமமென்றதனாலே அவர்க்குப் பரத்துவஞ் சித்தியாது. பரத்துவம் இம்மூவரையும் உண்டுசெய் தொடுக்குந்தகையால் நான்காவதென்னுஞ் சதுர்த்த சப்தத்திற்கும் அத்வைத சப்தத்திற்கும் உரிய ஏக வஸ்துவாய்ச் சிவமெனும் பெயரால் விளங்குவதற்கே சித்தியாகும். இதனை "ப்ரத்யயஸாரம்ப்ரபஞ்சோபசமம்சாந்தம்சிவமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே" எனத்



தசோபநிஷத்து ளொன்றெனப்படு மாண்டூக்கியோபநிஷத்தும், "ஏகாத்மப்ரத்யயஸாரம்ப்ரபஞ்சோபசமம்சிவம் சாந்தமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே" என நாரத பரிவிராஜகோபநிஷத்தின் அ-வது உபதேசமும், "சாந்தம் சிவமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே" என இராம தபநோபநிஷத்தின் உத்தரதாபிநியும், "அத்வைதம்சதுர்த்தம்ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதீதமேகமாசாஸ்யம்பகவந்தச்சிவம்" என பஸ்மஜாபாலோபநிஷத்தும், பிறவுங் கூறுமாற்றானறிக.

அந்த மாண்டூக்கியோபநிஷத் வசனத்திற்கு "ஞானமாத்ரகோசரமாய்; சங்கர்ஷணபிரத்யும்ந அநிருத்தர்களுக்கு லயஸ்தானமாய், சாந்தமாய், மங்கள ஸ்வரூபமாய் தன்னோடொத்த பொருளிலதாயிருக்கின்ற, வாஸுதேவமூர்த்தியை, நான்காவதாக நினைக்கின்றார்கள்" என்று வடமொழி இராமாநுஜபாஷ்யத்தில் அர்த்தமெழுதப்பட்டுள்ளது. இவ்வர்த்த முறுதியாதற்குப் பாஞ்சராத்திரத்திற் சொல்லப்பட்ட சங்கர்ஷணாதி மூர்த்த சப்தபந்தி மஹாநாராயணோபநிஷத்தில் "ஓம் தாமோதராய நம:|" என்றதற்பின் "ஓம் ஸங்கர்ஷணாய நம: ஓம் வாஸுதேவாய நம:| ஓம் பிரத்யும்நாய நம:| ஓம் அநிருத்தாய நம:" என்று முறை பிறழ்ந்து வருதலால் அவை, நாராயணரொருவர்க்கே யுரியனவாமன்றித் தேவரொருவனுக்குஞ் சீவர் மூவர்க்குமுரியவாய் நிற்கவில்லையன்றோ? சிவம் என்றதற்கு மங்களமெனப் பொருள்கொண்ட அவர் வாஸுதேவ சப்தம் அங்ஙனங் கண்டாரா? இல்லையே. சிவமென்பதை மங்களமென வாக்கிவிட்டால் அந்த (நான்காவது) சதுர்த்த சப்தத்திற்குரிய தெய்வத்தை எப்பெயர் கொடு அச்சுருதி விளக்கிற்றெனலாம்? வழியில்லையாகலின், அது சிவமெனும் பெயர்கொடே விளக்கிற்றென்பது வச்சிரலேபமாக நாட்டப்படும். சதுர்த்த சப்தங் காட்டுமிடந்தோறும் அப்பெயரே யன்றி, வாஸுதேவ நாராயண கோபால கேசவ ஹரியாதி பெயர்களில் யாதொன்று நிகழ்வதில்லை யென்பதை மேலுதகரித்த சுருதி வாக்கியங்களாற்றெளிக. நீலகண்ட சிவாசாரியர் அந்தச் சிவசப்தாதிகளின் பொருள் சிவபெருமானென்றே கொண்

டுள்ளார். அங்ஙனம் சங்கராசாரியார் பிரஹ்மஸ்வரூபமென்று அர்த்தஞ் செய்துள்ளார். பிர்மோபநிஷத்தில் "ஜாகரிதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணுஸ் ஸுஷுப்தௌ ருத்ரஸ் துரீயமக்ஷரம் |" என்றபடி பிரம விஷ்ணு ருத்திரரைக் கடந்த நான்காவது பொருள் அக்ஷரமெனும் பிரமம் என வருதலால் அது பொருந்தும். இதனாற் பிரஹ்மம் சிவமெனும் இரண்டும் ஒன்றுதானென்பதேற்பட்டது. அதனானே, வேதாந்த மஹாவாக்கியத்திலுள்ள பிரஹ்மசப்தமுஞ் சிவபரமாகவே பொருளாதல் திண்ணம். இது, பஞ்சப் பிரஹ்மோபநிஷத்தானது "துரீயம் ஸத்யசித்ரூபகம் ப்ரஹ்மவிஷ்ணவாதிபிஸ் ஸேவ்யம்" எனவெழீஇச்சிவனே துரீயப்பிரஹ்மமென்றும், பிரமவிஷ்ணு முதலியோர் அவரைச் சேவிக்கிறவரென்றும் ஸ்தாபித்தலானும் பஞ்சப்பிரஹ்மவக்திரம், பஞ்சப்பிரஹ்மமந்திரம், பாசுபதப்பிரஹ்மோபநிஷத்துளனும் வசனங்கள் சிவபக்ஷமாயிருத்தலானும் உறுதியாகும். இந்தத் துரீயப்பிரஹ்மசப்தம் விஷ்ணுமூர்த்திபக்ஷமாகச் செல்லாது. மேல்விளக்கியவாறு சம்புசப்தத்தானுஞ் சிவசப்தத்தானும் பிரஹ்மசப்தத்தானும் நான்காவது பொருள் வெளியிடப்பட்டிருப்ப, அச்சப்தங்களை நோக்காது வாசுதேவசப்தத்தை வருவித்ததும், மேலுதசரித்த பஸ்மஜாபாலோபநிஷத்வசனத்தில் அந்நான்காவது தெய்வம் பிரமவிஷ்ணுருத்திரர்கட்கு அதீதப்பட்ட சிவமென்று நன்கு விளக்கியிருப்பதை யறியாமல் சங்கர்ஷணாதி மூன்றுசப்தங்களைக் கொண்டுவந்ததும் இராமானுஜர் செய்கையாதலின் அவருண்மைகாணா மதாபிமான முடையாரென்றற் கையமில்லை. அவர் இம்மட்டோ செய்தார். கேநோபநிஷத்தில் "உமாம் ஹைமவதீ" என்பது ஹிமாசல புத்திரியான உமையவளென்று வியக்தமான அர்த்தந் தருவதற்கேற்பச் சங்கராசாரியர் பார்வதியென்றெழுதியதையுங் கருதாமே "புருஷாகார பூதையான உமையாய்த் தோன்றிய லக்ஷ்மி" என்றநுத்தம் பண்ணி அவ்விலக்ஷ்மியால் விளக்கப்பட்ட பிரஹ்மம் யக்ஷனாய் வந்ததாகும். அவன் இலக்ஷ்மிகாந்தனெனவுமெழுதி வைத்தார். இவ்விஷயத்தை விவரிக்கின்ற சூதசங்கிதை சாமசாகோபநிடத தாற்பரிய அத்தியாயத்தில், "நாரணன் முதலோர்



நேடியுங்காணா நாயகன்" என்றெழுஞ் செய்யுளில் "காரணக் கடவுள் யாவன் மற்றெனக்குக் கணவனாகிய பிரான் யாவன் - ஆரணமுணரான் யாவன் மற்றவனேயாகிய யக்ஷனாய் வந்தான்" என்று பரமசிவனது பரத்துவத்தைப் பார்வதி இந்திரனுக்கருளிச் செய்ததாக விருக்கின்றது. இப்பொருட்கு வியாசவசனத்தையுஞ் சுருதிவாக்கியங்களையும் மீறி வலிந்து பொருள் கொண்டதன்றோ அவ்வுரை. இப்படிப் பொருள் கொள்வதாயின் பிரமமே புல்லாயிற்று. அதனுள் பிரமமிருக்கிறதென்று புல்லுக்கும் பரத்துவந் தாபித்திடல் கூடுமே. இவ்விதம் அவர் செய்கை பலவுள. இவருரையை இவர்போன்றாரன்றி மற்றெந்த நியாய பண்டிதரொப்புவார்! இவரது பாஷியஞ் சிற்றறிவு கொண்டெழுதிய தென்றற்கு ௯-வது அதிகாரத்திற் காட்டுற்ற காரணமே சாலும். இவர் மதநிரூபண விஷயமாகத் திருநீற்றுச் சோழநுபதி யழைத்தமைக் கஞ்சிக் கல்லாடை வரைஇ வெள்ளாடையுடீஇ மேனாட்டுவழி மறைந்து செல்லுங்கால் "சோழன் கிருமி கண்டனாய் நசிக்கும்படியாக அபிசாரம் பண்ணி" என்று இளையாழ்வார் வைபவ மியம்புகின்ற அந்த நியாய அரசற்குச் சூனியகருமஞ் செய்ததுமன்றி அவ்வைபவங் கூறுமாறு பலவருடங்கட்குப்பின் அவ்வரசன் மரணச் செய்தியைத் திருநாராயணபுரத்திற் கேள்விப்பட்டு மகிழ்ந்தவருமாகின்றார். இச்செய்கைகள் தேகாபிமானமுஞ் சீவாபிமானமு மில்லாத் திருவருளாளர்க்குரியனவாமா? இவரை யதிராஜரென்றழைப்பதுந் தகுதித்தாமா? இந்நீரவரே ௧௨00-க்ஷபணர்க்கு ஆயிரம் பணாமுக மண்டல முடையவரா யிருந்து பிரதியுத்தரஞ் சொன்னாரென்று அவ்வைபவத்திற் புகழப்பட்டிருக்கின்றார். அப்புகழ்மைக்கிவ ருரியவராவ தெப்படியோ? உரியவராயின், அவர், அன்றே அந்த இராஜசபை புக்கு நமது ஆதிசேஷ மகிமையைக் காட்டுவது முக்கிய காரியமென்று அவ்வாறு செய்திருப்பாரன்றோ? செய்யின், அவர் பிரதம சீடர் கூரத்தாழ்வாரும் பெரிய நம்பியுங் கண்கள் பறிகொடுத்துச் செல்லவு நேரிடாதே. அச்செய்தியை யவர் திருநாராயண

புரத்திற் கேள்வியுற்று "ஐயோ! கண்ணபிரான்! அறையோ" என்று அவ்வைபவங் கூறுகின்றபடி சொல்லி அதிதுக்கங் கூர்ந்தழவு மிடமுண்டாகாதே. ஆயினமையால், அவ்வாயிரம் பணுமுக மண்டலச் செய்தி யெவ்வாற்றானு நம்பத்தகாததாம். மேலும் அவ்விராமாநுஜர், திருவரங்கத்திற் கூரத்தாழ்வார்க்குக் கண்ணுண்டாக்க வேண்டுமென்று கருதிப் பெருமாளைப் பிரார்த்திக்கும்படி யவ்வாழ்வார்க்குக் கட்டளையிட்டவாறு அவருஞ்செய்து "சீட்டெழுதத் தெரியாதான் பாட்டெழுதப் புகுந்தான்" என்பதற்கிணங்க வையகந் தெரிகிலா அவர் எனக்கு வைகுந்தந் தெரிகின்ற தென்றது கேட்டுத் திருப்தியில்லாமே நீயிழந்த கண்களை யீயும்படி செய்வலென்று அவரோடு போந்து பெருமாளைப் பெரிதும் பிரார்த்தித்த விடத்தும் அக்கண்களை வாங்கிக் கொடுத்தாரல்லர். இதனாற் சிவத்துரோக புத்தியுடைய வைணவர் வேண்டுகோளைச் சிவனடியவராயுள்ள ஸ்ரீமந்நாராயணர் அங்கீகரித்தருள்வதில்லை யென்றலுஞ் சித்தித்தது. இவ்விராமாநுஜரையும் அவர் சீடரையும் ஈச்வரஸ்வரூபர்களென வியாசர் பிரமாண்ட புராணத்திற் பிரகாசப்படுத்தினாரென்று வைணவர் மொழிப. இச்செய்தி நவீன சித்திரோர்த்துவ புண்டரத்தை யந்தப் புராணத்துச் சில பிரதிகளில் நுழைத்தவரா னுழைக்கப்பட்டதென்பதே நியாயம். இன்னன ஏதுக்களால் அவ்விராமாநுஜரைச் சேஷாவதாரமூர்த்தியென்பது அந்தச் சேஷனுக்கே யிழிவை யுண்டு பண்ணும். இப்படிப்பட்ட அவ்விராமாநுஜரைத் திக்கு விஜயஞ்செய்து வைணவந் தாபித்தவ ரென்று அவ்வைபவம் விளக்கியிடலுறுதியாமாறும் யாங்ஙனம்? அவர் மதத்திற்கு விரோதமாக முளைத்த இராமேசுரத்து இராமலிங்கமும், நூல்களும் ஏனை இன்னு மிருந்துகொண்டிருக்கின்றன. பிறவும் அன்ன. அச்சூனிய கருமஞ் சோழபூபதிக்கு அஞ்ஞான்றே பலித்ததென்னுஞ் செய்தி காணப்படாமையால் பின்னர்ப் பலித்ததென்றல் ஆகாசத் தாமரையாதல் வேண்டும்.

இனி, அந்நான்காவது தெய்வத்தைப் பிரஹ்மம் சிவமெனும் பெயர்களால் வேதம் விளக்கினமையின் அவ்



விரண்டி லொன்றே பிரதான தெய்வப் பெயராகக் கோடல் வேண்டும். அங்ஙனமாயின், மதம் - பிரஹ்மமதம் சிவமதம், ஆலயம் - பிரஹ்மாலயம் சிவாலய மென்றாதல் கூடுமன்றி, விஷ்ணுமதம் விஷ்ணு ஆலய மென்றாதல் கூடாது. கூடுமாறு வைணவர் மதமுங் கோவிலுமாகிவிட்டால், அவர் சிவமத தூஷணஞ் செய்யவாவது சிவசப்தம் செவியி னுழையலாகா தென்னவாவது இடமில்லையே. இந்தச் சிவசப்தம் போலவே மேற் காட்டுற்ற அதர்வசிகா வசனத்தில் மூவர் மேலாந் தெய்வப் பெயர் சம்புசப்தத்தாலுஞ் சர்வேசுவர சப்தத்தாலும் விளங்குகின்றது. இச் சப்தங்கள் சிவபெருமானுக்கேயுரிய நாமமென்று யாவர்க்கும் பொதுவான அமரகோசாதிக ளறையும். இவையிற்றை விஷ்ணுமூர்த்திக் காக்கவோ அக்கோசாதிகளிடங்கொடா; வலிந்தாக்கினும் அந்தச் சுருதிவாக்கியப்படி அந்தச் சிவசம்பு முதலிய நாமங்கள் சிரேஷ்டமாமேயன்றி விஷ்ணு நாராயணாதி நாமங்கள் சிரேஷ்டமாகா. அந்தச் சிரேஷ்ட நாமங்களை வைணவர் ஸ்மரியாமலும், தரியாமலு மிருத்தலால் அவை அவர்களாசரிப்பனவுமாகா. இப்படி யாசரியாதவற்றைப் பாரத்துவ விஷயத்தின் மட்டுங் கையாட்சி பண்ண முயல்வது நறிதாகுமோ? அவையற்றை யெஞ்ஞான்றுங் கையாட்சி பண்ணல் சைவரது நறிய கொள்கை யெனற்குச் சிவனை வழிபடுவோர் சைவர், சம்புவை வழிபடுவோர் சாம்பவர், மஹேசுவரனை வழிபடுவோர் மஹேசுர ரெனக் காண்டலும், அவர் அப்பெயர்களைத் தரித்தலும், பிரமநாயக மெனப் பெயர் கோடலுஞ் சான்றாகும். சிவசத்தி சிவை, சம்பு சத்தி சாம்பவி, ஈசுர சத்தி ஈசுரி, பிரமசத்தி பிராமி யென்று உமையவளை யுணர்ந்துகொள்ள நூல் வழக்கும், விஷ்ணு கோவிலிருக்கு மிடத்திற் சிவாலயமுமிருந்தால் அவ்வாலயத்தை மட்டும் ஈசுரன் கோவிலெனக் கொள்ள அதனை யீசுரன் கோவிலென்று வைணவருங் கூறுமுலக வழக்கும், அவ்விதமே "ஈசற் கிசைந்துடம்பிலோர் கூறு தான் கொடுத்தான்" என்று திருமங்கையார் கூறிய செய்யுள் வழக்கும் அந்தச் சிவாதி நாமங்களைச் சைவபக்ஷ

மாகவே தாபிக்கும், "சம்புரீசஃபசுபதிச்சிவ꞉" என்று அமர கோசங் கூறுதல் காண்க. இதனானே ஈசாவாஸி யோபநிஷத்தில் எங்கும் வியாபித்துள்ள பொருள் ஈசுர னென்பதற்கு அருத்தஞ் சிவபெருமானே யென்க. இத்திற னறியா வொரு வைணவர் சனியைச் சனீசுர னென்றாற் போலச் சிவனை ஈசுரனென்பதுமாமென்றனா ரென்றறிகின் றேம். அவர் சனியோடணை ஈசுரசப்தம் விசேடண மொழி யென அறியாராகலின் அவர் கூற்று வரம்பின்றியோடுவ தாம். இங்கே வைணவரிலும் ஈசுர நாமந் தரித்தவருண் டெனற்கு ஆளவந்தார் பிதா ஈசுர முனியெனவும், அவ்வீசுர முனி பிதாவுக்குப் பிதா ஈசுரபட்டரெனவு மிருந்தனரேயென் னின், அவரெல்லாம் இராமாநுஜர்க்கு முற்பட்டவராய் ஆழ்வார் பாடலிலுள்ள ஈசுர மொழியுணர்ந்து சைவ சம்பந்தமுமுடையரா யிருந்தாராகலின் அப்பெயர் கொண் டார். அது பெரு வழக்காகாது.

உடம்பில் இருதயஸ்தானம் எப்படிப் பிரதானமோ அப்படியே அந்நான்காவது தெய்வப் பெயரிற் பெருவா வாகவுள்ள சிவசப்தமும் வேத ஹிருதயமாய்ப் பிரதான மாய் நிற்கின்றது. விவரம்: அதர்வணத்தை யுட்கொண்ட இருக்காதி மூன்றுமே புராதன வேதமென்று மநுஸ்மிருதி க-வது அத்தியாயங் கூறுமாறு அவற்றினடுவிலுள்ளது யஜுர்வேதம். அதன் எழு காண்டங்களினடுவிலுள்ளது ச-வது காண்டம். அதனடுவிலுள்ளது ரு-வது பிரச்நமாகிய ஸ்ரீருத்ரம். அதனடுவிலுள்ளது "நமஸ்ஸோமாயச" எனும் அநுவாகம். அதனடுவிலுள்ளது "நமச்சிவாயச" எனும் வாக்கியம். அதனடு நிற்பது "சிவ" என்பதாம். இத் திறத்தானே வேதமாகிய வுடம்பிற்கு உயிர் சிவமென்பதல் லால் நாராயணாதி நாமங்களு ளொன்றுமன்றென்பதுஞ் சித் தித்தது. இப்படி வேதவுயிராய் வேதாந்தக் கனியாயுள்ள சிவபெருமானைச் சிந்தித்துய்யும் பாக்கிய மிழந்து "சிவ னுக்கு வேதமே கிடையாது" எனச் சொல்லித் திரியும் வைணவரும் குருபரம்பரை கூறுமாறு "சிவபஞ்சாக்ஷர முதலான க்ஷுத்ர மந்திரங்கள்" என்று சொன்னவரும்



எதுணர்ந்தவராவர்? இது கிடக்க, அந்தச் சிவசப்தஞ் சேர்ந்த ஐந்தெழுத்துமல்லவோ வைதிக சைவர்க்கு மோக்ஷ தாரக மந்திரமாயுள்ளன. அவற்று ளிரண்டெழுத்தை யேனும், "நாயோட்டு மந்திர நாதாந்த ஜோதி" என்று திரு மந்திர நூல் மறைத்துக் கூறுகின்ற மஹாமனுவெனும் ஓ ரெழுத்தையேனும் ஜபித்து மந்திர யோகின்வழி மனோலயங் கண்டு சிவசாக்ஷாத்கார மடைவர் பெரியோர். நாராயண சப்தமுள்ள அஷ்டாக்ஷரத்தில் இத்திற மகிமை காணுமா றுண்டோ? காளிகுறுப்பன் முதலிய தேவமந்திரங்களில் ஓங்கார உயிர் சேர்க்கப்பட்டதெப்படியோ அப்படியே அவ்வஷ்டாக்ஷர மென்பதிலும் அது சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வுயிரில்லையாயின் அக்காளியாதி மந்திரங்களியக்கமின் றிச் சடமாய்க் கிடக்குமாறு நாராயணமந்திரமும் ஏழெழுத் தாகிக் கிடக்கும். அவ்வாறு கிடவாமல் உயிராகவே யுளது ஐந்தெழுத்து மந்திர மெனற்கு அதனில் ஓங்கார மின்மையும், மேல்விளக்குற்ற இரண்டெழுத்து ஓரெழுத்து அநுபவமும், ஐந்தெழுத்தில் "நசி மசி" என மாறி யுச்சரிக்கப்படு மெழுத்துக்கள் ஓங்காரம் வேண்டாமலே விஷமுதலிய பிணி தீர்க்கின்ற அநுபவமுஞ் சான்றாகும். "அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்" என்றருளிச் செய்தபடி அந்த ஐந்தெழுத்தோடு ஓம் சேர்தல் ஐந் தெழுத்தி வாறெழுத்தாம். ஓம் ஆம் அவ்வும் சேர்தல் ஐந்தெழுத்தி லெட்டெழுத்தாம். சிவாய என்பதோடு ஓம் சேர்தல் ஐந்தெழுத்தி னாலெழுத்தாம். இவை அவ்வவ்வதி காரிக ணிமித்த மேற்பட்ட பேதமாம். அந்த ஓங்காரமான தாரகமந்திரம் பரமசிவனுக்குச் சொந்த மெனவும், அதன் வியஷ்டியான அம் உம் மம் என்பவை அவராற் பிரமவிஷ்ணு ருத்திரர்கட்கு அவர் காரியார்த்தமாக அளிக்கப்பட்டன வெனவும், அவ்வழிபவர்களையும் பிரணவரூபிகளென வேதம் விளம்புமெனவும் அறியவேண்டும். இதற்குப் பிரமாணம் பிரஹ்மவித்யோபநிஷத்தில் "தர்யக்ஷரஸ்யசிவஸ்யது" என வும் "அகாரஸ்யசரீரத்வ்யாக்யாதம்ப்ரஹ்மவாதிபி꞉" என வும், "விஷ்ணுச்சபகவாந்தேவ உகார꞉ பரிகீர்த்தித꞉" என,

வும், "ஈச்வர: பரமோதேவோமகார: பரிகீர்த்தித:|" எனவும் வருவன காண்க. "ஸதாசிவோம்" என்று தைத்திரியவேதஞ் சாற்றுதலு மிம்முடி பென்க. இச் சுருதி வசனங்களாலும் நான்காவது தெய்வம் ஓங்காரவாச்சியரான சிவபெருமானென்பதே சித்திக்கின்றது.

இத்தகைய சிவனுரை, இராமதாபிநியுபநிஷத்திற் சொல்லப்பட்ட தசரதகுமாரரது நாமமாகிய 'ராம' தாரகத்தைக் காசியிலிறப்பவர்க்கு உபதேசிக்குங் குருவென இகழுங் குதர்க்க வைணவர் கூற்றைக் கேட்போர் பன்முறை நகையாரோ? ஐந்தெழுத்தில் சி-ஆகிய சிவனும் வ-ஆகிய சிவசத்தியும் ஏய்ந்து 'சிவ' என நிற்றல் போல "ஹரா" எனுஞ் சிவநாமத்தின் ஈற்றெழுத்தும் மூன்று பிரணவங்கொண்ட "உமா" எனுஞ் சிவசக்தி நாமத்தின் ஈற்றெழுத்தும் ஏய்ந்து "ராமா" என நிற்கின்றன. இப்படிச் சிவ, சிவசக்திகளாயுள்ள ராமதாரகமாவது மேல் விளக்கிய பிரணவமான ஓங்கார தாரகமாவது பஞ்சாக்ஷர தாரகமாவது அவ்வப் பக்குவ ஆன்மாக்களுக்கு இசைய ஸ்ரீருத்ரபகவானு லுபதேசிக்கப்படு மென்பதே-மேற்படி யுபநிஷத் வாக்கியத்தாலும், "பிராணோக்கிரமண காலத்திற் காசியில் சர்வான்மாக்கட்குந் தாரகமெனும் பிரணவத்தை யுபதேசிக்கின்றார்" எனுமருத்தந் தருவதாய் "அத்ரஹிஜந்தோ: ப்ராணேஷூத்க்ரமமாணேஷு ருத்ரஸ்தாரகம்" என்றெழுவதாயுள்ள ஜாபாலோபநிஷத்வாக்கியத்தாலும், "காசியிற் பிராணோத்கிரமண காலத்தில் வேதவேதாந்த சாரமானதும் பிரணவமெனும் பிரஹ்மமாகிய எம்மை யர்த்தமாக வுடையதும் தாரகமானதும் ஆபாசத்தைக் கடந்ததுமாகிய எமது ரூபத்தைக் கிருபையாற் பிரசாதிக்கின்றோ மென்று சிவனாருளிச் செய்தார்" எனு மருத்தந் தருவதாய் "தத்ரைவோத்க்ரமமாணஸ்ய" என்றெழுவதாயுள்ள பராசரபுராண வாக்கியத்தாலும் ஏற்படும். தசரதராமர்க்கு முன்னே பரசுராமரொருவருண்டெனும் பிரஸ்தாபங் கேட்கப்படுதலால் ராமநாமந் தசரதராமர்க்கே யுரியதென்னவாவது அவ்வுபநிஷத்திலுள்ள ராமசப்தத்திற்கு